A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 59 / 2021**

திரு. நூன்சா கனகராஜ்,
18A, சிதம்பரம் விநாயகர் கோவில் தென்வடல் தெரு,
புதுக்குடி, புளியங்குடி – 627 855,
கடையநல்லூர் தாலுகா,
தென்காசி மாவட்டம். ………மேல்முறையீட்டாளர்
(திரு. நூன்சா கனகராஜ்)

எதிர்

செயற்பொறியாளர்/ கடையநல்லூர்,
O/o. செயற்பொறியாளர்/ விநியோகம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கடையநல்லூர் – 627 751.

...... எதிர்மனுதாரர்
(திரு. R. நாகராஜன், செயற்பொறியாளர்/கடையநல்லூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 13-07-2021**

**கேட்புரை நாள்: 08-10-2021**

**ஆணை நாள்: 11-01-2022**

13.07.2021 அன்று பெறப்பட்ட திரு. நூன்சா கனகராஜ், 18A, சிதம்பரம் விநாயகர் கோவில் தென்வடல் தெரு, புதுக்குடி, புளியங்குடி – 627 855, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 59/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 08.10.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் வீட்டின் அருகே உள்ள மின் கம்பத்தின் கேபிள் வயர்களை இலவசமாக மாற்றி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தன்னுடைய வீட்டின் அருகே உள்ள மின் கம்பத்தில் side arm அமைத்து கேபிள் வயர்களை இலவசமாக மாற்றி தரும்படி உதவி பொறியாளர் / நகர்புறம் / புளியங்குடி அவர்களிடம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்தை ஆய்வு செய்து மேல்முறையீட்டாளரின் வீட்டின் அருகே அமைந்துள்ள மின்கம்பம் கேபிள்களை மாற்றி அமைக்க DCW பணிக்கு முறையாக விண்ணப்பம் செய்து அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் கேபிள் வயர் மாற்றி அமைக்கப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மேற்படி DCW பணி இலவசமாக மாற்றி தரும்படி மேல்முறையீட்டாளர் திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 26.03.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் 08.07.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு:

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.07.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"**<u>மன்றத்தின் தீர்வு</u>**:

*இருதரப்பு வாதங்களையும் மன்றம் தீர ஆராய்ந்ததில் மனுதாரர் 2014–ல் மதிப்பீட்டுத்தொகை செலுத்தி பணிகள் நடைபெற்று முடிக்கப்பட்டதை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலங்களிலிருந்து தெரியவருகிறது. தற்போது மனுதாரர் தனது வீட்டின் அருகில் உள்ள மின்கம்பத்தில் உள்ள மின்கம்பிகளை மேலும் தள்ளி நகர்த்தி வைக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். மேற்படி பணிகள் செய்யவேண்டும் எனில் DCW முறையில் மதிப்பீட்டுத் தொகை செலுத்த உதவிப்பொறியாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு மனுதாரர் மதிப்பீட்டுத் தொகையை செலுத்த மறுத்துள்ளது தெரியவருகிறது.*

*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 6(1)ன் படி மின் இணைப்பு, மின்தொடர் இடமாற்றகட்டணம் என்ற தலைப்பிட்ட பிரிவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*"மின் இணைப்பு / மின்தொடர் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோர் ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத்தொகையை நுகர்வோர் முழுமையாக முன்கூட்டியே கட்டி விடவேண்டும். அத்தொகையை கட்டப்பட்ட பிறகே இடமாற்றம் பணிதொடங்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*எனவே மனுதாரர் கோரிக்கையான மின்கம்பியினை இடமாற்றம் செய்வது என்பது மதிப்பீட்டுத்தொகையை செலுத்திய பின்னரே சாத்தியம் என்பது தெளிவாகிறது. ஆகவே மனுதாரர் மின்கம்பியை மாற்றி அமைக்க மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் மனுதாரர் கோரிக்கை நிறைவேற்ற ஏதுவாகும் என்று மன்றம் தீர்வுசெய்கிறது.*

*<u>முடிவுரை:</u>*

*மனுதாரர் கோரிக்கையான மின்கம்பியை மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 6(1) ன்படி மதிப்பீட்டுத் தொகையினை செலுத்தும்பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று மன்றம் தீர்வு செய்து மனுவானது முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.10.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. டூன்சா கனகராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. R. நாகராஜன், செயற்பொறியாளர்/கடையநல்லூர், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மனு எண்.031/2020/21 இன் படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின்சார வழங்கல் விதித் தொகுப்பு 6(1) ன்படி மின் இணைப்பு மின் தொடர் இடமாற்ற கட்டணம் என்ற தலைப்பிட்ட பிரிவின் படியும் டிஎன் புதுக்குடி புளியங்குடி நகர் மின்பொறியாளர் பூபாலன் தலைமையில் சிதம்பர விநாயகர் கோவில் தெருவில் வசிக்கும் திரு அருள் ஜோசப் ராஜ் என்பவர் தமிழ்நாடு மின்வாரியம் கடையநல்லூர் தாலுகா புளியங்குடி நகரில் பணம் செலுத்த 20.3.2021 அன்று உறுதிமொழி கடிதத்துடன் மனு கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

5.2 அந்த உறுதிமொழியை செயற்பொறியாளர் பூபாலன் மற்றும் உதவி இளநிலை பொறியாளர் ஏற்றுக்கொண்டதாகவும், மதிப்பீட்டுத்தொகை செலுத்த க.எண்.இ.நி.பொ/ விநி/ நக/ பளி/கோ/கட்டு/அ.எண்.111/21 நாள் 20/3/2021 மூலம் மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி கொள்ளப்பட்டதாகவும், ஆனால் அவர் அளித்த உறுதிமொழி படிவத்தில் DCW முறையில் பணி நடைபெறும் பட்சத்தில் மற்றவருக்கு இடையூறு இல்லாமல் DCW பணி நடைபெற உறுதிமொழியை திரு அருள் ஜோசப் ராஜ் என்பவரிடம் வாங்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 திரு.அருள் ஜோசப் ராஜ் என்பவரிடம் உறுதிமொழி படிவம் வாங்கப்பட்டுள்ளதாகவும், உறுதிமொழியில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளின்படி DCW பணி மற்றவருக்கு இடையூறு ஏற்படாமல் நடைபெறவேண்டும், இடையூறு ஏற்படும் பட்சத்தில் அதற்கான முழுப் பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதற்கு முழு பொறுப்பு இளநிலை செயற்பொறியாளர்

மற்றும் புளியங்குடி செயற்பொறியாளர் மற்றும் திரு ஜோசப் ராஜ் என்பவர்கள் ஆவார்கள். DCW பணி நடைபெற்ற அன்றே (No objection) மறுப்புக் கடிதம் கொடுத்துள்ளதாகவும், பணம் பெற்றுக்கொண்டு, செயற்பொறியாளர் பூபாலன் அதிகாரிகளுக்கும் பணம் கொடுத்து தன் இஷ்டம் போல் செயல்படுவதாகவும், ஏற்கனவே இடையூறு ஏற்படுத்திய செயற்பொறியாளர் பூபாலன் மற்றும் திரு.அருள் ஜோசப் ராஜ் தான் தான் அளித்த விண்ணப்பத்திற்கு பணம் கட்டி மின்கம்பிகளை ஒதுக்க வேண்டும் எனவும், DCW பணி நடைபெற அளித்த விண்ணப்பங்களை தனக்கு பெற்றுத் தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தான் ஏற்கனவே பணம் கட்டி DCW பணி செய்துள்ளதாகவும், மனு எண். 031/2020-21-ன்படி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் ஒருதலைபட்சமாக செயல்படுவதாகவும், மன்ற உறுப்பினர் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதாகவும், தான் வைத்திருக்கும் அலுவலக கடிதங்களை பார்வையிட்டு உண்மைக்கு நிகராக அளித்த விண்ணப்பத்திற்கு பணி செய்து தரும்படி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 புளியங்குடி TN புதுக்குடி, விநாயகர் கோவில் தெருவில் வசிக்கும் திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் தன்னுடைய பழைய வீட்டின் அருகில் இருந்த மின் கம்பத்தை மாற்றி அமைக்க 2014 ஆம் ஆண்டு விண்ணப்பித்து DCW வேலைக்காக ரூ.28,480/- (ரூபாய் இருபத்தி எட்டாயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) பணம் செலுத்தி அப்போது புதிய மின்கம்பம் அமைத்து மின் வயர்கள் தெருவின் ஓரமாக நகர்த்தி வைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதாகவும், தற்போது 7 ஆண்டுகளுக்கு பிறகு அவரது பக்கத்து வீட்டில் வசிக்கும் திரு.அருள் ஜோசப் ராஜ் என்பவர் தன்னுடைய வீட்டின் அருகே இருந்த மின் வயர்களை மாற்றி அமைக்க புளியங்குடி நகர்புற அலுவலகத்தில் 11.3.2021 அன்று DCW பணிக்காக உறுதிமொழி படிவத்துடன் விண்ணப்பித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 விண்ணப்பத்தின் அடிப்படையில் DCW பணிக்காக உதவி பொறியாளர் நகர்புறம்/புளியங்குடி அலுவலகத்தில் மதிப்பீடு தயார் செய்து Lr.No.AE/D/T/PLGI/CA/F.Doc.059/20-21 dt. 11-3-2021 மூலம் அனுப்பப்பட்டு உதவி

செயற்பொறியாளர் அலுவலகத்தில் San.No.AEE /D/PGDI /CA/ San. No. 150/20-21 dt. 15-3-2021 மூலம் மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு 17/3/2021 அன்று திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்கள் மதிப்பீடு கட்டணம் ரூ.6,250/- மின் வாரிய அலுவலகத்தில் செலுத்திய பின்னர் 20.3.2021 அன்று திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்களுடைய வீட்டின் அருகே அமைந்த P44 என்ற மின்கம்பத்தில் Side arm போடப்பட்டு மின் வயர்கள் சற்று தள்ளி மாற்றி அமைக்கப்பட்டதாகவும், அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் வீடு அமைந்துள்ளதாகவும், அவர்களுடைய வீட்டின் அருகில் மின்கம்பம் W30/P1 அமைந்துள்ளதாகவும் அந்த வீட்டின் மின் கம்பத்தில் திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்களுக்கு DCW பணி செய்யும் போது எந்த பணியும் நடைபெறவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் மனு எண்.031/2021/21 மூலம் திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அளித்துள்ள மனுவில் திரு.டூன்சா கனகராஜ் தன்னுடைய வீட்டின் அருகில் அமைந்துள்ள மின் கம்ப எண்.W30/P1- ல் திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்களுடைய வீட்டின் அருகில் உள்ள மின் கம்பத்தில் அமைக்கப்பட்டது போன்ற Side arm அமைத்து DCW மதிப்பீட்டு தொகை செலுத்தாமல் வயர்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை அளித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் திரு.டூன்சா கனகராஜ் அவர்கள், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் திரு.அருள் ஜோசப் ராஜ் DCW விண்ணப்பத்துடன் அளித்த உறுதிமொழி அடிப்படையில் பணிகள் நடைபெறவில்லை என்றும், ஆனால் திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்கள் அளித்துள்ள உறுதிமொழி படிவத்தில் கீழ்கண்டவாறு உறுதிமொழி கொடுத்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

1. மதிப்பீடு தயார் செய்து பணி ஆணை கிடைக்கப்பெற்று பணி துவங்கும்போது பணி இடத்தில் ஏதாவது எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத்தில் அதில் நானே முன் நின்று சரி செய்வேன்.
2. மதிப்பீடு தயார் செய்த அளவே பணி செய்யப்படும் என்பதை நன்கு அறிவேன். இதற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்க மாட்டேன் என உறுதி கூறுகிறேன்.
3. மதிப்பீடு தயார் செய்து பணி ஆணை கிடைக்கப்பெற்று பணி துவங்கும் போது பணி இடத்தில் ஏதாவது எதிர்ப்பு தெரிவித்து அதனால் பணி நடை பெறாமல்

காலதாமதம் ஏற்பட்டால் கட்டிய பணத்தை திரும்ப கோரமாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

4. மதிப்பீடு தயார் செய்து தாங்கள் செலுத்திய தொகையைவிட கூடுதலாக ஏதேனும் தணிக்கையிலிருந்த வசூல் செய்ய கோரும்போது அதையும் நானே செலுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

மேற்கண்ட உறுதிமொழிகளை திரு.அருள் ஜோசப்ராஜ் அவர்கள் அளித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் கூறியுள்ளபடி திரு.அருள் ஜோசப் ராஜ் DCW விண்ணப்பத்துடன் அளித்த உறுதி மொழி அடிப்படையில் தான் பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி DCW பணி திரு.டூன்சா கனகராஜ் அவர்களுக்கு எவ்விதமாக இடையூறும் இல்லாமல் முடிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் புளியங்குடி நகர் மின்பொறியாளர், செயற்பொறியாளர் திரு.பூபாலன் என மனுதாரர் மனுவில் தவறாக சுட்டிகாட்டியுள்ளதாகவும், திரு.பூபாலன் புளியங்குடி உபகோட்டத்தில் உதவி செயற்பொறியாளராக உள்ளார் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளபடி உதவி செயற்பொறியாளர், திரு.பூபாலன் மற்றும் திரு.அருள் ஜோசப் ராஜ் ஆகியோர்கள் திரு.டூன்சா கனகராஜ் (மேல்முறையீட்டாளர்) அவர்கள் வீட்டின் அருகே மின் கம்பிகளை மாற்ற DCW வேலைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு.அருள் ஜோசப்ராஜ் DCW பணி நடைபெற்ற அன்று திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் அப்ஜெக்சன் கடிதம் கொடுத்தாக தவறான தகவல்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் அவரால் உதவி பொறியாளர் / நகர்புறம் / புளியங்குடி அலுவலகத்தில் மேற்படி பணி நடைபெற்றதற்கு எந்தவித எதிர்ப்பும் வாய்மொழியாகவோ / எழுத்துபூர்வமாகவோ தெரிவிக்கவில்லை எனவும், மாறாக தன்னுடைய வீட்டின் அருகே அமைந்துள்ள மின் கம்பத்திலும் (w30/P1) திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்கள் வீட்டில் அமைத்தது போன்று side arm

போட்டு வேலை செய்து தரும்படி வாய்மொழியாக கேட்டுள்ளதாகவும், அதற்கு உதவி பொறியாளர் / நகர்புறம் / புளியங்குடி அவர்கள் DCW முறைப்படி விண்ணப்பம் செய்தால் மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் மனுதாரர் திரு.டூன்சா கனகராஜ் அவர்களுக்கும் side arm போட்டு மின் வயர்கள் மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேல்முறையீட்டாளர் அவர்கள் அதற்கு தான் இப்போது பணம் கட்ட முடியாது எனவும், ஏற்கனவே 2014 ஆம் ஆண்டு DCW பணிக்காக பணம்கட்டி உள்ளதாகவும், அதற்கு உதவி பொறியாளர் / நகர்புறம் / புளியங்குடி அவர்கள் மனுதாரர் கட்டிய பணத்திற்கு 2014 ஆம் ஆண்டே பணிகள் முடித்துக்கொடுக்கப்பட்டு விட்டது எனவும் மனுதாரர் மறுபடியும் புதிதாக வீட்டை மின்கம்பத்திற்கு மிக அருகே கட்டியுள்ளார் எனவும், தற்போது மனுதாரருக்கு மின்வயரை மாற்றி அமைக்க வேண்டுமானால் DCW முறையில் பணம் கட்டினால் மட்டுமே அமைக்க முடியும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் உதவி செயற்பொறியாளர் திரு.பூபாலன், திரு.அருள் ஜோசப் ராஜ் அவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு அவருடைய இஷ்டப்படி பணி செய்கிறார் என்ற பொய்யான குற்றசாட்டை மனுவில் கூறியுள்ளதாகவும், ஆனால் உதவி செயற்பொறியாளர் யாரிடமும் பணம் எதுவும் பெறவில்லை எனவும் மேலும் தற்போது திரு.அருள் ஜோசப்ராஜ் அவர்கள் வீட்டின் அருகே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பத்தில் (P44) முடிக்கப்பட்டுள்ள DCW பணி மனுதாரருக்கு எவ்வித இடையூறாகவும் இல்லை எனவும், திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் தன்னுடைய வீட்டின் அருகே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பத்தில் மின் வயர்களை வாரிய செலவிலேயே மாற்றி அமைக்க தேவையில்லாத குற்றசாட்டுகளை கூறியுள்ளதாகவும், அவர் வீட்டின் அருகே அமைந்துள்ள மின் கம்பத்திலும் (W30/P1) ABC (ARIEL BUNCHED CABLE) வயர்கள் தான் அமைக்கப்பட்டு உள்ளது என்பதையும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் தன்னுடைய வீட்டின் அருகே உள்ள மின் கம்பத்தில் side arm அமைத்து கேபிள் வயர்களை இலவசமாக மாற்றி தரும்படி உதவி

பொறியாளர் / நகர்புறம் / புளியங்குடி அலுவலகத்திற்கு 11 முறை கடிதம் கொடுத்துள்ளார். தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக 3 முறை கடிதம் எழுதி கேட்டுள்ளார். அனைத்திற்கும் மனுதாரர்க்கு சரியான பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 எனவே திரு.டூன்சா கனகராஜ் அவர்கள் தன்னுடைய வீட்டின் அருகே அமைந்துள்ள மின்கம்பம் W30/P1 ல் side arm அமைத்து மின் கேபிள்களை மாற்றி அமைக்க DCW பணிக்கு முறையாக விண்ணப்பம் செய்து அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு side arm அமைத்து கேபிள் வயர் மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 திரு அருள் ஜோசம் ராஜ் அவர்கள் தனது வீட்டருகில் உள்ள மின் கம்பத்திலிருந்து செல்லும் மின்கம்பிகளை DCW திட்டத்தில் 20.03.2021 அன்று உறுதிமொழி கடிதத்துடன் பணம் செலுத்தி பணி செய்யப்பட்டதாகவும், உறுதிமொழியின்படி மற்றவருக்கு இடையூறு ஏற்படாமல் நடைபெற வேண்டுமெனவும், DCW பணி நடைபெற்ற அன்று தான் மறுப்புக் கடிதம் கொடுத்துள்ளதாகவும், தான் ஏற்கனவே பணம் கட்டி DCW பணி செய்துள்ளதால் தற்போது தனது வீட்டருகே செல்லும் மின் கம்பிகளை திரு அருள் ஜோசப் ராஜ் செலவில்தான் நகர்த்தி வைக்க வேண்டுமென மேல்முறையீட்டாளர் திரு டூன்சா கனகராஜ் தெரிவித்துள்ளார்.

7.3 புளியங்குடி TN புதுக்குடி, விநாயகர் கோவில் தெருவில் வசிக்கும் திரு டூன்சா கனகராஜ் அவர்கள் தன்னுடைய பழைய வீட்டின் அருகில் இருந்த மின் கம்பத்தை DCW திட்டத்தின் கீழ் 2014–இல் மாற்றி புதிய மின் கம்பம் அமைத்து மின் கம்பிகளை தெருவின் ஓரமாக நகர்த்தி வைக்கப்பட்டதாகவும், தற்போது 20.03.2021 அன்று மேல்முறையீட்டாளரின் வீட்டருகில் வசிக்கும் திரு அருள் ஜோசப் ராஜ் அவர்களின் வீட்டருகில் உள்ள P44 மின்கம்பத்தில் DCW திட்டத்தில் side arm உள்ள போடப்பட்டு

மின்கம்பிகளை சற்று தள்ளி மாற்றி அமைக்கப்பட்டதாகவும், அவ்வாறு பணி செய்யும்போது திரு டூன்சா கனகராஜ் அவர்களின் வீட்டருகில் உள்ள W30/P1 மின்கம்பத்தில் எந்த பணியும் நடைபெறவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். திரு அருள் ஜோசப்ராஜ் அவர்களின் வீட்டருகில் உள்ள P44 மின்கம்பத்தில் side arm அமைத்துள்ளதுபோல் தன்னுடைய வீட்டருகில் உள்ள W30P1 மின் கம்பத்திலும் side arm அமைத்து DCW மதிப்பீட்டுத் தொகை செலுத்தாமல் மின்கம்பிகளை மாற்றியமைக்க வேண்டுமென மேல்முறையீட்டாளர் கோருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் திரு அருள் ஜோசப் ராஜ் அவர்களுக்கு DCW பணி செய்யும்போது மேல்முறையீட்டாளர் திரு டூன்சா கனகராஜ் அவர்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் முடிக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் எவ்வித மறுப்புக் கடிதமும் கொடுக்கவில்லையெனவும், 2014-இல் DCW முறைப்படி விண்ணப்பம் அளித்து மதிப்பீடு பெறப்பட்டு 2014-ஆம் ஆண்டே மேல்முறையீட்டாளரின் பணிகள் முடிக்கப்பட்ட பிறகு தற்போது புதிதாக வீட்டை மின்கம்பத்திற்கு மிக அருகே கட்டியுள்ளார் எனவும், மின் கம்பிகளை மாற்றி அமைக்க வேண்டுமானால் DCW முறையில் பணம் செலுத்தினால் மட்டுமே மாற்றி அமைக்க முடியும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 2014-இல் தன்னுடைய வீட்டின் அருகே இருந்த மின்கம்பத்தை DCW முறையில் நகர்த்தி வைத்தபிறகு 2021-இல் தன் வீட்டுக்கருகில் வசிக்கும் திரு அருள்ஜோசப் ராஜ் அவர்கள் DCW முறையில் side arm அமைத்ததனால் தனக்கும் அதுபோன்று தனக்கு செலவில்லாமல் மின்கம்பிகளை நகர்த்தி வைக்குமாறு மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார். மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 086-010-66 தற்காலிக மின் இணைப்பாக 19.01.2015 அன்று மாற்றியிருப்பது மின்நுகர்வோர் பேரிட்டினை ஆய்வு செய்த போது அறியமுடிகிறது. பிறகு மேற்கண்ட மின் இணைப்பு 15.03.2016-இல் வீட்டு மின் இணைப்பாக மாற்றியிருப்பது தெரிகிறது. அதாவது 2014-இல் மேல்முறையீட்டாளரின் வீட்டுக்கருகில் இருந்த மின் கம்பம் இடம் மாற்றி புதிய கம்பம் நிறுவிய பிறகு 2015-இல் மேல்முறையீட்டாளர் புதிய வீடு கட்டியுள்ளார் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறன். மேலும் திரு அருள்ஜோசப் ராஜ் அவர்களின் வீட்டுக்கருகில் உள்ள P44 மின் கம்பத்தில் side arm பொறுத்தி DCW முறையில் மின்கம்பியை வீட்டுச் சுவரில் இருந்து தள்ளி மாற்றி

அமைக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளரின் வீட்டருகில் உள்ள W30/P1 மின் கம்பத்தில் எந்த பணியும் நடைபெறவில்லையெனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். அவ்வாறு மின் கம்பியை தள்ளி வைத்ததனால் மேல்முறையீட்டாளரின் வீட்டு சுவருக்கு அருகில் மின்கம்பி மேலும் நகர்ந்திருக்க வாய்ப்பில்லையென கருதுகிறேன். ஆகையால் திரு அருள்ஜோசப் ராஜ் அவர்களின் செலவில் தன்னுடைய மின் கம்பத்தில் உள்ள மின் கம்பியை மாற்றி அமைக்க வேண்டுமென்கிற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என கருதுகிறேன்.

7.5 மின்கம்பியை தனக்கு செலவில்லாமல் மாற்றி அமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின்வழங்கல் விதி 5(6)(1)–ஐ ஆராய விரும்புகிறேன். மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“5(6)(1) மின்னிணைப்பு, மின்தொடர் இடமாற்றக் கட்டணம்*
> *மின்னிணைப்பு / மின்தொடர் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழு மையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும்.”*

மேற்கண்ட விதியின்படி மின்கம்பியை சற்று தள்ளி மாற்றி அமைக்க வேண்டுமெனில் DCW முறையில் பணி செய்வதற்கான கட்டணத்தை மேல்முறையீட்டாளரே ஏற்க வேண்டுமென்கிற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறேன். ஆகையால் தனக்கு செலவில்லாமல் திரு அருள்ஜோசப் ராஜ் செலவில் தன்னுடைய வீட்டருகில் உள்ள மின்கம்பியை (Ariel Bunched cable) மாற்றியமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.

7.6 2014–இல் தனது வீட்டின் அருகில் இருந்த மின்கம்பத்தினை மாற்றி அமைக்கும் பொருட்டு தான் அளித்த DCW விண்ணப்பங்களை பெற்றுத்தரும்படி மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார். இது சம்பந்தமாக விண்ணப்பம் அளித்துள்ள எதிர்மனுதாரரின் அலுவலகத்தை அனுகி தேவையான நகலை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளரின் மேற்படி கோரிக்கை மின்குறைதீர்ப்பாளரின் மேல்முறையீட்டு வரம்புக்குள் வராதென தெரிவிக்கப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் வீட்டுக்கருகில் உள்ள மின்கம்பி/வயர்கள் (Ariel Bunched cable) தனக்கு செலவில்லாமல் மாற்றியமைக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்கிறேன்.

8.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டாளரின் மனு எண் 59/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

**1. திரு. ரீன்சா கனகராஜ்,**
**18A, சிதம்பரம் விநாயகர் கோவில் தென்வடல் தெரு,**
**புதுக்குடி, புளியங்குடி – 627 855,**
**கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம்.**

2. செயற்பொறியாளர்/ கடையநல்லூர்,
O/o. செயற்பொறியாளர்/ விநியோகம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கடையநல்லூர் – 627 751.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி – 627 011.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.